செயற்பொறியாளர், நீவது., சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், சேப்பாக்கம், சென்னை-5

முன்னிலை:- பொறி.கு.ரா.சுகந்தி., பி.இ.,
செயற்பொறியாளர், நீவது.,

**செயல்முறை ஆணை எண்.நிஉ1/62/2020 நாள்:29.12.2021.**

பொருள்:- பணியமைப்பு - பொ.ப.து. – த.நா.அ.ப.தொகுதி – பணிக்காலத்தில் இயற்கை எய்திய திரு.செ.முருகன், மின்கம்பியாளர் தரம் II மகன், திரு.மு.விக்னேஷ், இளநிலை உதவியாளர் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை:-
1. முதன்மைத் தலைமைப் பொறியாளர் நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ்.3(4)/35256/2018, நாள்.22.02.2020.
2. கண்காணிப்புப் பொறியாளர், நீ.ஆ.து., சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு வட்டம், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.நிஉ1/159/2020/ நாள்.28.02.2020.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.நிஉ1/கோ.697/2019 நாள்.02.03.2020.
4. அரசாணை(3ப) எண்.34 பொதுப்பணித்(பி1) துறை, நாள்:22.11.2021.
5. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றம் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.ஆ.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ்3(2)/34435/2021, நாள்:15.12.2021.
6. கண்காணிப்புப் பொறியாளர், நீஆது., சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.நிஉ1/159/2020, நாள்:28.12.2021.

******

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திரு.மு.விக்னேஷ், இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிநியமனம் பார்வை (4)-ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணையின் படி தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 02.03.2020 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

அவர் தனது தகுதிகாண் பருவத்தினை பணிவரன்முறைபடுத்தப்பட்ட நாளான 02.03.2020 முற்பகல் முதல் துவங்கியதாக கருதப்படுகிறார். மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

...2

தமிழ்நாடு சார்நிலைப் பணித்தொகுதி விதிகள் 23 (எ)(II)-ன் படியும் தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளின் படியும் திரு.மு.விக்னேஷ், இளநிலை உதவியாளர் பதவியில் மொத்தம் மூன்றாண்டு பணிக்காலத்தில் முதல் இரண்டாண்டு தகுதிகாண் பருவக்காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான பயிற்சியினை பெற்று வெற்றிகரமாக முடித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 02.03.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்கப்படுகிறது.

29/12/21

செயற்பொறியாளர்., நீ.ஆ.து.,
சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

பெறுநர்
திரு.மு.விக்னேஷ்,
இளநிலை உதவியாளர்,
சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம்,
சென்னை-5.

29/12/2021

நகல்: முதன்மைத் தலைமைப் பொறியாளர் நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்புப் பொறியாளர்., நீ.ஆ.து. சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு வட்டம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: நி௨2 (பட்டியல்)
நகல்:உபரி.